OS.No. 01/2025

Date : 03.02.2026

Witness Name & Rank – திருவருட்செல்வி - DW1

**சாட்சி அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

**1.** எனது சொந்த ஊர் எதுவென்றால் சோழிங்கநாதபுரம் ஆகும். எனக்கு கிரையம் கொடுத்தவரின் சொந்த ஊர் எதுவென்றால் இளவந்தி கிராமம் ஆகும். கிரையம் வாங்குவதற்கு முன்பு எனக்கு அவரது குடும்ப விவரங்கள் தெரியாது என்றால் பெரிதாக தெரியாது. அவர்களுக்கு என்ன தொழில் என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வாதத்தில் சொல்லியுள்ள கிரையம் கொடுத்தவரின் விவரங்கள் அனைத்தும் எனது சொந்த கருத்துக்கள என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்தவர் கிரையப்பத்திரத்தில் அவருக்கு அவரது பாட்டி சுயமாக சம்பாதித்து வாங்கியதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்தவரின் பாட்டி அம்மணியம்மாள் மற்றும் அவரது கணவர் முத்துசாமி ஆகியோர் ஒரே குடும்பமாக தான் வாழ்ந்து வந்தனர் என்றால் சரிதான்.

2. அந்த காலத்தில் அம்மணியம்மாளுக்கு சுயமாக சம்பாதிக்க வாய்ப்புகள் இல்லை என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது, பக்கத்து ஊர் தான். மேற்படி சொத்தை அம்மணியம்மாள் வாங்கிய போது வாதி ரத்தினம்மாளும் அவரது மகன் ராமலிங்கமும் சிறு வயது என்றால் தெரியாது. வாதி எந்த எந்த சொத்தில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அம்மணியம்மாள் அவரது பேரனுக்கு உயில் எழுதி வைத்த சொத்ததுக்களில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அம்மணியம்மாள் வழக்கு சொத்தை வாங்குவதற்கு முன்பு முத்துச்சாமி அவரது பூர்வீக சொத்துக்களில் விவசாயம் செய்து வந்தார் என்றால் தெரியாது. மேற்படி முத்துச்சாமி தனது பூர்வீக சொத்துக்களை விற்பனை செய்து தான் வழக்கு சொத்துக்களான அம்மணியம்மாள் பெயரில் உள்ள ஒரு அயிட்ட சொத்தும் முத்துச்சாமி பெயரில் உள்ள மற்றொரு அயிட்ட சொத்தையும் வாங்கினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. வழக்கு சொத்துக்களை கூட்டுக்குடும்ப சொத்துக்களாக தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அது கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் தான் அம்மணியம்மாள் தனது மகன் பெயரிலும் வாதி பெயரிலும் ஒரு உயில் ஆவணம் எழுதிவைத்திருந்தார் என்றால் அம்மணியம்மாள் தனது பேரனின் பெயரில் தான் உயில் எழுதிவைத்தாக கேள்விப்பட்டு சொத்தை வாங்கினேன். நான் சொல்வது போல் அல்ல என்றும் அம்மணியம்மாள் உயிலை தனது மகன் மற்றும் மகள் பெயரில் எழுதிவைத்திருந்த நிலையில் மகன் ராமலிங்கம் இறந்த பிறகு அவரது மகன்களான பிரதிவாதிகள் 3 மற்றும் 4 ஆகியோர் அம்மணியம்மாளின் வயதோகித்தை பயன்படுத்தி ஏமாற்றி மேற்படி உயில் ஆவணத்தை ரத்து செய்து அனைத்து

சொத்துக்களின் மீதம் தங்களது பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொண்டனர் என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை எனவே அது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை அடிப்படையாக கொண்டு நான் வாங்கிய கிரையம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. மேலும் மேற்படி வழக்கு சொத்தில் ஒரு அட்டவணை முத்துச்சாமி பெயரில் உள்ளதாலும் 1ம் பிரதிவாதி அம்மணியம்மாள் தவறிவிட்டதாலும் இந்து வாரிசு உரிமை சட்டப்படி வாதிக்கு பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. அம்மணியம்மாள் கிரையம் பெற்ற சொத்தானது கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து வாங்கப்பட்ட சொத்து என்பதால் அது கூட்டுக்குடும்ப சொத்தாகவே பாவிக்கப்படும் எனவே வாதிக்கு அதில் பங்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. இது வரை சொத்து கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எனவே நான் எதிர்வாதத்தில் சொல்லியுள்ளது போல் தனி அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் உரிய மறுபயனின் பேரில் கிரையம் செய்யவில்லை 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு உறவினர் என்ற அடிப்படையில் கிரைய ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. எ னவே வாதி கோரியுள்ளபடி அவருக்கு உரிய பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு,
அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர்
அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.